1971 அக்டோபர் 23]

தனிப் பயிற்சிக் கல்லூரிகள்

* 32 வினு.—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

தனியாரால் நடத்தப்பட்டு வரும் தனிப் பயிற்சிக் கல்லூரிகளை (Tutorial Colleges) ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

மாயூரம் நகரில் உணவுக் கலப்பட வழக்குகள்

* 33 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969–70-ம் ஆண்டில் உணவுக் கலப்படச் சட்டத்தின் கீழ் மாயூரம் நகரில் தொடுக்கப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) அவைகளில் எத்தனை பேருக்கு தண்டனை கிடைத்துள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) மாயூரத்தில் 1969–70-ஆம் ஆண்டில் உணவுக் கலப்படச் சட்டத்தின் கீழ் போடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 36. அந்த 36 பேர்களுக்கும் வெவ்வேறு வகையான தண்டனை கிடைத்திருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்படி, இரண்டாவது முறை தவறு செய்தால் அதிகமாகத் தண்டனை கொடுக்கவேண்டும் என்று குறிப்பு ஏற்கனவே இருக்கிறதே அம் மாதிரி தண்டனை அளிக்கப்பட்டவர்களின் விவரங்களைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது மாயூரம் நகரத்தில் மட்டும் போடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையாகும். 36 வழக்குகளில் 32 பேருக்கு அபராதமும், மீதி 4 பேர்களில் மூன்று பேருக்கு சிறைத் தண்டனையும், ஒருவருக்கு அபராதமும் சிறைத் தண்டனையும் சேர்த்து விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இரண்டாவது முறை அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளானவர்கள் ஒரு விதமான தண்டனைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்றுதான் எனக்கு யூகிக்க இடம் இருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, உணவுப் பொருள்களில் கலப்படம் செய்தவர்களை பஞ்சாப் மாநிலத்தில் விலங்கிட்டு வீதி வழியே அழைத்துவந்து, அவர்கள் குற்றவாளிகள் என்ற எண்ணத்தை சமுதாயத்தில் உருவாக்குவதற்கு பஞ்சாப் மாநில அரசு செய்ததைப்போல் நம்முடைய மாநில அரசும் அத்தகைய தவறு செய்தவர்களுக்கு வெறும் அபராதமும் சிறைத் தண்டனையும் அளிப்பதோடு, விலங்கிட்டு அவர்களைத் தெருவில் அழைத்துச் செல்லவும் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது ஏற்பாடாகாது. அது சட்டமாகச் செய்யப்பட வேண்டிய நிலைமையில் இருக்கும். அது தேவையானல் பரிசிலிக்கப்படலாம். ஆனல், சமுதாயத்தில் மிகப் பலரைத் தண்டிக்கும் முறை வளருமானுலும்கூட, சமுதாயமே குற்றவாளிச் சமுதாயமாக மாறுவதற்கு அதுவும்கூட இடம் ஏற்படுத்திவிடும். எனவே,